# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590


**ஆணை நாள்: 17.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண்.SA5563/F/2019**

திரு பே. கருப்பசாமி ... மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்/ பொது,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருநெல்வேலி. ... பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 14.03.2019 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 03.05.2019 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 13.06.2019 |

******

## ஆணை

இன்று (17.09.2019) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு பே. கருப்பசாமி மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஒப்புதல் பெற்ற திரு S.மந்திரமூர்த்தி, நிர்வாக அலுவலர், திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், திருநெல்வேலி ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 14.03.2019 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், 2010 முதல் 2019 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மேற்பார்வை மின் பொறியாளர் அலுவலகத்தில் கையாளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை குற்றச்சாட்டுகள் எத்தனை என்றும், அதன் மீது எடுக்கப்பட்ட பணியாளர்கள் பெயர் விவரம் போன்ற தகவல் வழங்கவும், மேற்குறிப்பிட்ட காலத்தில் திருநெல்வேலி

மேற்பார்வை மின் பொறியாளர் அலுவலகத்தில் பெறப்பட்ட மேல்முறையீட்டு மனுக்களின் விவரம், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் போன்ற தகவல்களை வழங்கக்கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், மேற்பார்வை பொறியாளர் அலுவலகம், திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், திருநெல்வேலி என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 29.03.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 8(1)(j)ன்படி தகவல் வழங்க இயலாது என தகவல் வழங்கியுள்ளார். தான் கோரிய தகவல் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படவில்லை என்றும், அவற்றை வழங்கக் கேட்டும், 03.05.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். 14.05.2019 தேதியிட்டு மேல்முறையீட்டு அலுவலரும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையே வழங்கியுள்ளார். அதனைத்தொடர்ந்து மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல் வழங்க மறுத்துள்ளதாகவும், தகவல் வழங்க மறுத்த அலுவலருக்கு உரிய தண்டனை வழங்கவும்., தான் கோரிய தகவல்களை பெற்று வழங்கவும் கேட்டு, பிரிவு 19(3)ன் கீழ் 13.06.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர்/மேல்முறையீட்டாளர் கோரிய தகவல், தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 8(1)(j)-ன்படி வழங்க இயலாது என்றும், அளவுக்கு அதிகமான சேகரித்து தொகுத்து வழங்கக்கூடிய தகவல் என்பதாலும், தனிநபர் தொடர்பான தகவல் என்பதாலும், மேல்முறையீட்டாளருக்கு தகவல் வழங்க இயலாது எனவும் ஆணையத்தில் தெரிவித்தார்.

5. மேல்முறையீட்டாளரின் மனு மற்றும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவல் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்ததில், மேல்முறையீட்டாளர் மூன்றாம் நபர் தொடர்பான தகவல் கோரியுள்ளது தெரியவருகிறது. **பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்த ஆவணங்களை நோக்கும் போது மனுதாரர்/ மேல்முறையீட்டாளருக்குப் பொதுத் தகவல் அலுவலர் 29.03.2019 தேதியிட்டும்,** 14.05.2019 **தேதியிட்டு மேல்முறையீட்டு அலுவலர் வழங்கியுள்ள தகவல்/ பதில் ஏற்றுக்கொள்ளக் கூடியது என ஆணையம் முடிவு செய்கிறது. மேலும் மேல்முறையீட்டாளர் கோரும் மேற்படி தகவலானது மாண்பமை உச்சநீதிமன்றம் GIRISH RAMCHANDRA DESHPANDE -Vs- CEN. INFORMATION COMMR & ORS. {SLP (CIVIL) No.27734/2012 Dt. 03.10.2012 }** என்ற வழக்கில்:

> “The performance of an Employee/Officer in anorganization is primarily a matter between the employee and the employer and normally those aspects are governed by the Service Rules which fall under the expression "personal information", the disclosure of which has no relationship to any public activity or public interest. On the otherhand, the disclosure of which would cause unwarranted invasion of privacy of that individual ……………. the petitioner cannot claim those details as a matter of right"

"The Petitioner in the instant case has not made a *bona fide* public interest in seeking information, the disclosure of such information would cause unwarranted invasion of privacy of the individual under Section 8(1)(j) of the RTI Act." …………….

எனஅளித்துள்ள தீர்ப்பு இவ்வழக்கிற்கும் பொருந்துமென ஆணையம் முடிவுசெய்கிறது.

**6.** விசாரணையின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் மூன்றாம் நபர் குறித்த தகவலாகவும், அதிக அளவிலான பொதுநலன் கருதி மனு தாக்கல் செய்யப்பட்டதாக இல்லாத சூழ்நிலையிலும், இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து, இம்மேல்முறையீட்டுமனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**ஒம்/- ச.த. தமிழ்குமார்**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.SA5563/F/2019</u>**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்/ பொது,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருநெல்வேலி.

<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>

திரு பே. கருப்பசாமி,
கதவு எண்.3D, தெற்கு தெரு,
ஆணையார்குளம்,
பெருமாள்புரம் அஞ்சல்,
திருநெல்வேலி - 627 007.

**Copy to: Judgement File.**

**Spare/ AM/PS - 190919**